**சுருக்கம்**

பள்ளிக் கல்வி-கட்டிடங்கள்-2005-2006ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டம் "மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலகக் கட்டிடம்- 4 அலுவலகக் கட்டிடங்கள் கட்டுமானம்" -நிதி மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு வழங்குதல்-ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (எக்ஸ்-1)துறை**

அரசாணை (நிலை) எண்.98
நாள் 31.5.2005

படிக்கவும்

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.36548/கே2/2004
நாள் 13.5.2005.

----------

ஆணை

தொடக்கக் கல்வி இயக்குநரின் படிக்கப்பட்ட கடிதத்தில், 2005-2006 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலகங்கள் நான்கிற்கு, நான்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுமானம் செய்வதற்கு, கட்டிடம் ஒன்றிற்கு ரூ.7.68 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.30.72 இலட்சம் தொடரா செலவினமாக ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கும்படி அரசிடம் கேட்டுள்ளார்.

2) தொடக்கக் கல்வி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்தது, 2005-2006 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர், திருச்சி மாவட்டம், திருச்சி, தூத்துக்குடி மாவட்டம், தூதுக்குடி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்களில் அதன் தலைநகரங்களில், 4 மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டிடங்கள், கட்டிடம் ஒன்றிற்கு ரூ.7.68 இலட்சம் வீதம், நான்கு கட்டிடங்களுக்கும், தொடராச் செலவினமாக (மூலதனம்) மொத்தம் ரூ.30,72,000/- (ரூபாய் முப்பது இலட்சத்து எழுபத்திரண்டாயிரம் மட்டும்) கட்டுமானப் பணிக்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3) இக்கட்டுமானப் பணிக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பணம் எடுக்கும் அலுவலரான தொடக்கக் கல்வி

இயக்குநர் பெற்று வழங்கிடுவார். மேலும் ஒருங்கிணைப்பாளர் மற்றும் கண்காணிப் பாளராக நிர்வகிப்பார். இந்த 4 கட்டுமானப் பணிகளும் தொழில் நுட்பக்கல்வி வட்டம், பொதுப்பணித்துறை மூலம் செயல்படுத்தப்படும்.

4) மேற்படி செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

" 4202-கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு-01.பொதுக்கல்வி-201-தொடக்கக்கல்வி-பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-II மாநிலத் திட்டம் JD கட்டிடங்கள் கட்டுதல்-தொழில் நுட்பக் கல்வி வட்டம் மூலம் செயலாக்கம்--16 பெரும் பணிகள் (த.தொ.கு. 4202-01-201-JD-1603)".

5) இவ்வரசாணை நிதித் துறையின் இசைவுடன் அ.சா.கு.எண்.38429/Edn-II/2005 நாள் 30.5.2005.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
மாநில கணக்காயர், சென்னை-18
சம்பளம் மற்றும் கருவூல கணக்கு அலுவலர்(தெற்கு) சென்னை-35
மாநில கருவூல கணக்காயர், சென்னை-35

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.